வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

நாள் 17.04.2024 புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

- ராமநவமி கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- மக்களவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள, தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த, 102 தொகுதிகளுக்கான தேர்தல் பரப்புரை இன்று மாலை 6.00 மணியுடன் முடிவடைந்தது.
- ஒரே நாடு-ஒரே தேர்தலின் தேவையை ஒட்டு மொத்த நாடும் உணர்ந்து இருப்பதாக பிரதமரும் பிஜேபியின் மூத்த தலைவருமான திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மே மாதம் 13ஆம் தேதி நடைபெறவுள்ள 4ஆம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு நாளை வெளியிடப்படுகிறது.

**ராமநவமி (14)**

ராமநவமி இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ஸ்ரீராமர் வெளிப்படுத்திய தன்னலமற்ற அன்பு, வீரம், மற்றும் தாராள மனப்பான்மை ஆகியவற்றின் உயர்ந்த கொள்கைகள் மனிதகுலத்திற்கு உத்வேகம் அளிக்கும்

ஆதாரமாகும என்று தெரிவித்துள்ளார். குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் ஸ்ரீராமரின் தெய்வீக ஆசிர்வாதங்கள் மக்களின் வாழ்க்கையை, மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்பால் நிரப்புகிறது என்று குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் ராமரின் வாழ்க்கையும் கொள்கைகளும், வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கான வலுவான அடித்தளமாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

<u>தேர்தல் பரப்புரை 1 (19)</u>

மக்களவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள, தமிழகம், புதுச்சேரி, ராஜஸ்தான், உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த, 102 தொகுதிகளுக்கான தேர்தல் பரப்புரை இன்று மாலை 6.00 மணியுடன் நிறைவு பெற்றது. இன்று மாலை 6.00 மணி முதல் நாளை மறுநாள் மாலை, வாக்குப்பதிவு நடைபெற்று முடியும் வரை பொதுக்கூட்டம், ஊர்வலம், ஊடகங்கள் மற்றும் சமூக வலை தளங்களிலும், பொழுது போக்கு நிகழ்ச்சி என எந்த வகையிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது. மீறுபவர்களுக்கு 2 ஆண்டு சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த, 102 மக்களவை தொகுதிகளுக்கு நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவை ஒட்டி விரிவான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. தமிழகத்தில் 39, ராஜஸ்தானில் 12, உத்தரபிரதேசத்தில் 8, மத்திய பிரதேசத்தில் 6, உத்தரகாண்ட், அஸ்ஸாம் மற்றும் மஹாராஷ்டிராவில் தலா 5, பீகாரில் 4, மேற்கு வங்கத்தில் 3, அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மற்றும் மேகாலயாவில் தலா 2, சத்தீஷ்கர், மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, புதுச்சேரி, அந்தமான் நிக்கோபர் தீவுகள், ஜம்மு-காஷ்மீர், மற்றும் லட்சத்தீவில் தலா ஒரு மக்களவை தொகுதி என மொத்தம் 102 மக்களவை

## தேர்தல் பரப்புரை 2 (18)

தொகுதிகளுக்கு ஏப்ரல் 19ஆம் தேதி காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இதற்கிடையே, அருணாச்சல பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த தலா ஒரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

புதுச்சேரி மாவட்டத் தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன், வாக்குப்பதிவு தொடர்பாக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த தேர்தலில் 2 ஆயிரத்து 587 வாக்குப்பதிவு இயந்திரங்களும், ஆயிரத்து 254 கட்டுப்பாட்டு இயந்திரங்களும், ஆயிரத்து 324 விவிபாட் இயந்திரங்களும் பயன்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார். புதுச்சேரியில் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்குச்சாவடி சீட்டு வழங்கப் பட்டுள்ளதாகவும், இந்த சீட்டு இருந்தாலும், வாக்காளர்கள் வாக்களிக்க வரும்போது, வாக்காளர் அடையாள அட்டையை காண்பித்தல் அவசியம் என்றும், தெரிவித்தார்.

அடையாள அட்டை இல்லாதவர்கள் ஆதார் அட்டை, பான் கார்டு, மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது அஞ்சலக கணக்குப் புத்தகம்,

## தேர்தல் பரப்புரை 3 (12 )

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் பணி அட்டை, ஒட்டுநர் உரிமம் உள்ளிட்ட 12 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்றும் திரு. குலோத்துங்கன் தெரிவித்தார். இன்று மாலை 6.00 மணி முதல், வரும் 20ஆம் தேதி காலை 6.00 மணி வரை புதுச்சேரி முழுவதும் 144 தடை உத்தரவு அமலில் இருக்கும் என்றும், அவர் மேலும் கூறினார். புதுச்சேரி மக்களவை தொகுதியில் பிஜேபி வேட்பாளராக போட்டியிடும் திரு. நமசிவாயத்தை ஆதரித்து, முதலமைச்சர்

திரு. ரங்கசாமி, கதிர்காமம், இந்திரா நகர் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார். பிஜேபி வேட்பாளர் திரு.நமசிவாயம் வெற்றி பெற்றால், மத்திய அமைச்சராகும் வாய்ப்பு உள்ளது என்றும் புதுவை மாநில வளர்ச்சிக்கு அவர் கூடுதல் நிதி பெற்றுத் தருவார் என்றும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறினார்.

காங்கிரஸ் வேட்பாளர் திரு. வைத்திலிங்கம், உப்பளம் ராஜ்பவன் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது, புதுச்சேரி மின்துறை தனியார் மயமானால் கட்டணம் மேலும் உயரும் என்றும் மின் துறை தனியார் மயமாவதை தங்களால் மட்டுமே தடுக்க முடியும் என்றும் கூறினார்.

<u>மோடி 1 (19)</u>

அஸ்ஸாம் மாநிலம், நல்பாரியில் இன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திர மோடி உரையாற்றினார். போஹாக் பிஹூ பண்டிகையை முன்னிட்டு மக்களுக்கு அவர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். அப்போது பேசிய அவர், இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ராம நவமி பண்டிகையை கொண்டாடப்படுவதாகவும், 500 வருட காத்திருப்புக்கு பிறகு, ராமர் தனது அற்புதமான கோயிலை அலங்கரித்துள்ளதாகவும் தெரிவித்தார். பல நூற்றாண்டுகளில் பக்தி பல தலைமுறைகளின் தியாகங்களின் உச்சத்தை இன்று நாடு காண்பதாகவும், பிரதமர் கூறினார். மேலும், 2014ஆம் ஆண்டில் மோடி மக்கள் மீதான நம்பிக்கையுடன் வந்ததாகவும், 2019ஆம் ஆண்டில் மோடி மீண்டும் வந்த போது நம்பிக்கையுடன் வந்ததாகவும் குறிப்பிட்டார். தற்பொழுது 2024ஆம் ஆண்டில் மோடி அஸ்ஸாம் நிலத்திற்கு ஒரு உத்தரவாதத்துடன் வந்திருப்பதாகவும், மோடியின் உத்தரவாதம் என்பது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவாதம் என்றும் பிரதமர் கூறினார். சப்கா சாப் சப்கா விகாஸ் என்ற பிஜேபியின் கொள்கைகளை எடுத்துரைத்த அவர் தேசிய ஜனநாயக

கூட்டணி அரசின் திட்டங்கள் பாரபட்சமற்றவை என்றும், அனைவருக்கும் பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் உறுதி அளித்தார்.

<u>மோடி 2 (3)</u>

அடுத்த 5 ஆண்டுகளில் ஏழைகளுக்கு 3 கோடி புதிய வீடுகளைக் கட்டித் தர தேசிய ஜனநாயக கூட்டணி உறுதியளிப்பதாக கூறிய பிரதமர், இலவச ரேஷன் அரிசி தொடர்ந்து வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

<u>ராகுல் காந்தி 1 (17)</u>

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பிஜேபி 150 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெறும் என காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். உத்தரபிரதேச மாநிலம காசியாபத்தில் சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவுடன் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்த அவர், 2024 மக்களவை தேர்தல் என்பது சித்தாந்தங்களுக்கான போர் என்றும், மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் குறித்து பிஜேபி ஒரு போதும் பேசுவதில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார். தேர்தல் பத்திரங்கள் திட்டம் குறித்துப் பேசிய திரு. ராகுல் காந்தி, இது மிரட்டி பணம் பறிக்கும் வகையிலான திட்டம் என்று கூறினார். தேர்தல் நிதியில் வெளிப்படைத் தன்மையை நிலை நாட்டவே, தேர்தல் பத்திர திட்டம் கொண்டுவரப் பட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறும் நிலையில், உச்ச நீதிமன்றம் இந்த திட்டத்தை ஏன் ரத்து செய்தது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். உத்தர பிரதேசத்தில் காங்கிரசும், சமாஜ்வாதி கட்சியும் மக்களவை தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன.

ஒரே நாடு ஒரே தேர்தல் (13)

ஒரே நாடு-ஒரே தேர்தலின் தேவையை ஒட்டு மொத்த நாடும் உணர்ந்து இருப்பதாக பிரதமரும் பிஜேபியின் மூத்த தலைவருமான திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்தி நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், ஒரே நாடு-ஒரே தேர்தல் குறித்து அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு நாடு முழுவதும் சாதகமான கருத்துக்களைப் பெற்றிருப்பதாக கூறினார். ஒரே நாடு -ஒரே தேர்தல் முறை அமல்படுத்தப்பட்டால் நாடு பல பரிமாணங்களில் பயனடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த பிரதமர் திரு.மோடி, சர்வதேச அளவில் வளர்ச்சி பெற்று வரும் ஒவ்வொரு துறைக்கும் இந்தியாவை உலகளாவிய மையமாக மாற்றுவதே பிஜேபியின் முக்கிய தீர்மானமாக உள்ளது என்றார். நாட்டின் வளர்ச்சிக்காக 24 மணி நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் தாம் கடுமையாக பாடுபட்டு வருவதாகவும், பிரதமர் குறிப்பிட்டார்.

4ஆம் கட்ட தேர்தல் (11)

4ஆம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு நாளை வெளியிடப்படுகிறது. 9 மாநிலங்கள், மற்றும் 1 யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 மக்களவை தொகுதிகளுக்கு மே மாதம் 13ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. ஆந்திர பிரதேசத்தின் அனைத்து 25 தொகுதிகளுக்கும், தெலங்கானாவில் 17 தொகுதிகளுக்கும், உத்தரபிரதேசத்தில் 13, மகாராஷ்டிராவில் 11, மத்திய பிரதேசம் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 1, பீகாரில் 5, ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4, ஜம்மு காஷ்மீரில் 1 தொகுதிக்கும், 4ஆம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது. ஒரே கட்டமாக நடைபெறவுள்ள ஆந்திர மாநில சட்டசபை தேர்தல் மற்றும் ஒடிஷா மாநில முதல்கட்ட சட்டசபைத் தேர்தலுக்கான அறிவிப்புகளும் நாளை வெளியிடப்பட உள்ளன.

ஐபிஎல் கிரிக்கெட் (3)

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று குஜராத் மற்றும் டெல்லி அணிகள் விளையாடுகின்றன. அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் இன்று இரவு 7.30 மணிக்கு போட்டி தொடங்குகிறது.

மோடி வாழ்த்து (8)

சத்குரு ஸ்ரீ சித்தரூதா சுவாமி ஜெயந்தியை முன்னிட்டு பிரதமர் திரு.நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார். ஆன்மிக அறிவொளி, சமூக நல்லிணக்கம் மற்றும் விளிம்பு நிலை மக்களுக்கு அதிகாரம் அளித்தல் போன்றவற்றில் சத்குரு ஸ்ரீ சித்தரூதா சுவாமிகள் செய்த பங்களிப்புகளுக்காக நினைவுகூரப்படுகிறார் என்று சமூக ஊடகப்பதிவில் பிரதமர் தெரிவித்துள்ளார். அவரது வாழ்க்கையும், தொண்டும், அனைத்து உயிர்களின் நலனுக்கான ஆழ்ந்த அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் திரு. மோடி குறிப்பிட்டுள்ளார்.

தீரன் சின்னமலை (10)

தீரன் சின்னமலை பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார். சமூக வலைதளப்பதிவில் இது தொடர்பாக குறிப்பிட்டுள்ள பிரதமர், தீரன் சின்னமலை இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மிகச்சிறந்த தலைவராக நினைவுகூரப்படுவதாக தெரிவித்துள்ளார். காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியதில், அவரது முன்மாதிரியான துணிச்சலும், போர்த் தந்திரமும் மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார். தீரன் சின்னமலை தமிழ்நாட்டின் கொங்குநாடு பகுதியை ஆண்டு ஒரு பாளையக்காரர் மற்றும் குறுநில மன்னராவார். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக போராடிய அவர் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.